இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 10-10-2025

# சிறப்புக்கு சிறப்பு!

கோவையில் பத்து கிலோ மீட்டர் தூரத்துக்கு மாபெரும், பிரமாண்டமான பாலத்தை அமைத்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அதற்கு மாபெரும் மேதையும், மிகப்பெரிய அறிவியல் கண்டுபிடிப்பாளருமான ஜி.டி.நாயுடு என அறியப்பட்ட கோ.துரைசாமி அவர்களின் பெயரைச் சூட்டி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

கோவை மக்களின் நீண்டநாள் கோரிக்கை அவினாசி சாலை உயர்மட்ட மேம்பாலம் ஆகும். கோவை மக்களுக்கு மிக நெருக்கடியைக் கொடுத்து வந்த போக்குவரத்து நெரிசலை மொத்தமாக போக்குவதற்கான திட்டம் இது. 2020 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இது அறிவிக்கப்பட்டு இருந்தாலும், அவர்கள் ஆட்சியில் 5 விழுக்காடு பணிகள் மட்டும்தான் நடந்திருந்தது.

2021 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி அமைந்தது. அதன்பிறகு தான் முழுமையான நிதி ஒதுக்கப்பட்டது. ரூபாய் ஆயிரத்து 791 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 10.10 கிலோ மீட்டர் நீளம் என உறுதி செய்யப்பட்டது. இந்தப் பாலத்தின் 95 விழுக்காடு பணிகளையும் விரைந்து முடித்து அதன் திறப்பு விழாவுக்கு தயார் ஆகிவிட்டது.

**“கோவை என்றாலே புதுமை என்பதற்கேற்ப, புதிய பாலத்திற்கு, புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளால் பெருமை சேர்த்த இந்தியாவின் எடிசன் - தந்தை பெரியாரின் உற்ற கொள்கைத் தோழர் ஜி.டி.நாயுடு பெயரை இந்த மேம்பாலத்துக்குச் சூட்டி மகிழ்கிறேன்” என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இது அறிவுலகுக்கு சூட்டப்பட்ட மாபெரும் மகுடம் ஆகும்.**

இந்திய அறிவியல் இயலின் உண்மை முகங்களில் ஒன்று ஜி.டி.நாயுடு அவர்கள். கோபால்சாமி துரைசாமி என்ற இயற்பெயரை விட ஜி.டி.நாயுடு என்பதுதான் அனைவரும் அறிந்த பெயராக ஆகிவிட்டது.

**கோவை மாவட்டம் கலங்கல் என்ற கிராமத்தில் பிறந்த இவர் தனது கண்டுபிடிப்புகள் மூலமாக உலகத்தையே கலக்கினார். அந்தக் காலத்தில் பல லட்சங்கள் கொடுத்து அமெரிக்க நிறுவனங்கள் இவரது கண்டுபிடிப்பை விலை பேசிய போது, அதனைத் தரமறுத்தவர் அவர். இட்லரையும், முசோலினியையும் புகைப்படம் எடுத்தவர் அவர்.**

இளம் வயதில் ஒரு மோட்டார் தொழிற்சாலையில் வேலைக்குச் சேர்ந்து, அதிலேயே தங்கி விடாமல் தனது நண்பர்களுடன் சேர்ந்து பருத்தி மில் தொடங்கி அதன் மூலமாக பெரிய தொழில் அதிபராக வளர்ந்தார். ஒரு பேருந்தை வாங்கி பொள்ளாச்சிக்கும் பழனிக்கும் இயக்கினார். பின்னர் யுனைடெட் மோட்டார் சர்வீஸ் என்ற நிறுவனத்தை தொடங்கினார். பேருந்து புறப்படும், வந்து சேரும் நேரத்தை அறிவிக்கும் கருவியையும், பயணச் சீட்டுக் கருவியையும் அவரே கண்டுபிடித்தார். மோட்டார் ரேடியேட்டருக்கு இணையான ஒரு இயந்திரத்தை கண்டுபிடித்தார். வேக கணிப்பு கருவியையும் உருவாக்கினார். அதாவது பேருந்தை வைத்தே அதற்குத் தேவையான கருவிகளைக் கண்டுபிடித்தார்.

அவரது கண்டுபிடிப்பு மூளையானது எல்லாப் பக்கமும் பாய்ந்தது. சலவை இயந்திரம், காபி தயாரிக்கும் கருவி, சப்பாத்தி தயாரிக்கும் கருவி, கால்குலேட்டர், சுவர் கடிகாரம் இப்படி பலதையும் கண்டுபிடித்தார். விதைகள் இல்லாத நார்த்தங்காய், விதைகள் இல்லாத ஆரஞ்சு பழங்கள் உருவாக்கினார். பெரிய பெரிய கதிர்களுடன் சோளம் விளைவித்தார்.

புகைப்படக் கேமராவுக்குத் தேவையான கருவிகளைக் கண்டுபிடித்தது. பழச்சாறு பிழியும் கருவியைக் கண்டுபிடித்தார். பிளேடு உருவாக்கினார். இதற்கான பொருட்களை வெளிநாடுகளில் இருந்து வரவைத்தார். 1936 ஆம் ஆண்டு ஜெர்மன் கண்காட்சியில் இவரது பிளேடு, மூன்றாவது பரிசைப் பெற்றது. 1940 ஆம் ஆண்டே ஜெர்மனியில், ‘Coimbatore, India’ என்று தலைப்பிடப்பட்ட பொருட்களை அணிவகுக்க வைத்தார்.

ஆனால் இந்தியாவில் இவரது கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை பெறுவதில் சிக்கல் ஏற்பட்டது. ‘இந்தியர்கள் யாரும் இதனை பயன்படுத்தலாம்’ என்று அறிவிக்கும் பெருந்தன்மையும் அவருக்கு இருந்தது. தனது மோட்டார் வாகனங்களை கோவை வட்டாரக் கழகத்துக்கு இலவசமாக அளித்தார். (80 ஆண்டுகளுக்கு முன்னால் 18 லட்சம் மதிப்புக் கொண்டவை அவை) குறைந்த செலவில் கார் தயாரிக்கலாம், குறைந்த செலவில் வீடு கட்டலாம் என்று சொல்லி அதை நிரூபித்துக் காட்டினார்.

**அதனால்தான் இவரை, ‘தமிழ்நாட்டின் நிதி’ என்றார் தந்தை பெரியார். திராவிடர் கழக மாநாடுகளில் கலந்து கொண்டார். உரையாற்றினார். தமிழ்நாட்டின் உரிமைகளுக்கு குரல் கொடுத்தார். தனது கண்டுபிடிப்புகளுக்கு மத்திய அரசு ஆதரவு தராமல் இருப்பதைக் கண்டித்தும், அதிக வரிப் போடுவதைக் கண்டித்தும் 1954 ஆம் ஆண்டு சென்னையில் ஒரு நிகழ்ச்சியை நடத்தினார் ஜி.டி.நாயுடு. அதில் தனது கண்டுபிடிப்புகள் அனைத்தையும் போட்டு நொறுக்க முடிவெடுத்தார்.**

இந்த நிகழ்ச்சிக்கு தந்தை பெரியார், டாக்டர் வரதராஜுலு, முன்னாள் முதலமைச்சர் சுப்பராயன், பேரறிஞர் அண்ணா உள்ளிட்ட அன்றைய பெரும் தலைவர்கள் அனைவரையும் அழைத்திருந்தார். அனைவருமே ஜி.டி.நாயுடுவை பாராட்டினார்கள். அவர் உடைப்பது சரிதான் என்றார்கள். பெரியார் மட்டும்தான், உடைக்கக் கூடாது என்று பேசினார். ‘உங்கள் கண்டுபிடிப்புகளுக்கு அனுமதி தராத டெல்லி அரசாங்கத்தை உடையுங்கள், உங்கள் கண்டுபிடிப்புகளை எதற்காக உடைக்கிறீர்கள்?’ என்று சொன்னார். அந்த அளவுக்கு இருவருக்கும் உரிமையும், நட்பும் இருந்தது.

**‘இந்தியாவின் எடிசன்’ என்று போற்றப்பட்ட ஜி.டி.நாயுடுவின் கண்டுபிடிப்புகள் கோவை அவினாசி சாலையில் கண்காட்சி, அருங்காட்சியகமாக இருக்கிறது. “விஞ்ஞானம், பொறியியல் ஆகிய துறைகளைப் பற்றிய 18 ஆயிரம் புத்தகங்களும், உளவியல் தொடர்புடைய 3 ஆயிரம் நூல்களும் எனது நூலக அறையில் இருக்கின்றன. அவற்றை ஆழ்ந்து படித்ததின் மூலம்தான் ஓரளவுக்கு நான் அறிவு பெற்றேன். நீங்களும் இளம் வயதிலேயே அறிவு வேட்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்” என்று மாணவர்களுக்கு அறிவுரை கூறினார்.**

“நம்பிக்கை, துணிச்சல், நேர்மைக்காகப் போராடும் குணம் ஆகியவற்றை வளர்த்துக் கொள்ளுங்கள். உயர்வான குறிக்கோளும், அறிவுத் தாகமும், அதற்கேற்ற உழைப்பும் இருந்தால் உங்களால் எதை வேண்டுமானாலும் சாதிக்க முடியும்.” என்று சொல்லி இளைய தலைமுறைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் ஜி.டி.நாயுடுவைப் பெருமைப்படுத்தும் வகையில் பிரமாண்டமான பாலத்துக்கு அவரது பெயரை சூட்டி இருக்கிறார் மாண்புமிகு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**பாலம், சிறப்பானது. பெயர், அதனினும் சிறப்பு!**



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், விளாத்திகுளம் மற்றும் தென்காசி சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகங்களையும் வழங்கினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 7.10.202 அன்று முகாம் அலுவலகத்தில், கழக மூத்த முன்னோடி மறைந்த கும்மிடிப்பூண்டி வேணு அவர்களின் மகளும், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட துணை செயலாளருமான திருமதி உமா மகேஸ்வரி அவர்களின் பேரனுக்கு “உதய் வேணு” என்று பெயர் சூட்டினார். இந்நிகழ்வின்போது, திருமதி. துர்கா ஸ்டாலின், திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ரமேஷ் ராஜ் மற்றும் திருமதி உமா மகேஸ்வரி குடும்பத்தினர் உடனிருந்தனர்.

## வாலாசா வல்லவன் தலைமையில்

# பெரியாரியல் அறிஞர் வே.ஆனைமுத்து நூற்றாண்டு நிறைவு விழா - மலர் வெளியீடு!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

### ஆர்.ராசா எம்.பி. – அமைச்சர் சா.சி.சிவசங்கர் – கொளத்தூர் தா.செ.மணி – கு. இராமகிருட்டிணன் – சுப.வீ பங்கேற்பு!

சென்னை, அக்.10-

பெரியாரியல் அறிஞர் வே.ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா - மலர் வெளியீடு நடைபெறுகிறது. துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலரை வெளியிட்டு சிறப்புரை ஆற்றுகிறார்.



பெரியாரியல் அறிஞர் தோழர் வே.ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா - மலர் வெளியீடு இன்று (10.10.2025 - வெள்ளிக்கிழமை) காலை 10 மணி முதல் பகல் 1.30 மணி வரை இராஜா அண்ணாமலைபுரம், முத்தமிழ்ப் பேரவை, டி.என்.இராச ரத்தினம் அரங்கத்தில் நடைபெறுகிறது.

மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளரும், புதிய சிந்தனையாளன் ஆசிரியருமான வாலாசா வல்லவன் தலைமையில், சா.குப்பன் வரவேற்புரையில் நடைபெறும் இந்நிகழ்வில் கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மலரை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பேராசிரியர் நாகநாதன், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி, தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கு.இராமகிருட்டிணன், புலவர் செந்தலை கவுதமன், திராவிடர் கழகப் பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அ.அருள்மொழி, திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன், மயிலை த.வேலு எம்.எல்.ஏ., மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி பொதுச் செயலாளர் தி.துரை சித்தார்த்தன், தோழர் க.முகிலன் ஆகியோர் கலந்து கொண்டு சொற்பொழிவு ஆற்றுகின்றனர்.

நூற்றாண்டு மலரின் படிகளை வே.ஆனைமுத்து அவர்களின் மூத்த மகள் ஆ.தமிழ்ச்செல்வி, மருமகன் சீனு அரிமாப் பாண்டியன், மூத்த மகன் ஆனை. பன்னீர் செல்வம் மற்றும் சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் மாம்பலம் ஆ. சந்திரசேகர் ஆகியோர் பெற்றுக் கொள்கிறார்கள்.

மேலும் இதில் மோ.சி. சங்கர், நா.மதனகவி, க.குப்புசாமி, மா.முருகேசன், த.இளவரசன், மீ.டில்லிபாபு, ந.கருணாகரன், கோ.மு.கருப்பய்யா, மா.முத்தமி ழன், மா.சுப்பிரமணி ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

காஞ்சி சி.நடராஜன் நன்றியுரை ஆற்றுகிறார்.

இவ்விழா ஏற்பாடுகளை மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி செய்துள்ளது.

## ‘தமிழ்நாடு போராடும், தமிழ்நாடுவெல்லும்’ எனும் வாசகத்தை கிண்டல் செய்து

# ஜனநாயகத்துக்கு எதிராகச் செயல்படும் ஆளுநர் ரவிக்கு கண்டனம்!

## கோவை மாநகர் மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்! துரை செந்தமிழ்ச் செல்வன் தலைமை!

கோவை, அக்.10-

கோவை காந்திபுரம் குறுக்கு வெட்டு சாலையில் அமைந்துள்ள கோவை மாவட்ட தி.மு.கழக அலுவலகத்தில் மாநகர் மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்டப் பொறுப்பாளர் துரை செந்தமிழ்ச் செல்வன் தலைமையில் துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் கழக சொத்துப்பாதுகாப்பு குழு துணை தலைவர், முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, கழக தீர்மானக்குழு செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கழக மாணவர் அணி செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ் காந்தி, மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் பி.ஆர்.அருள்மொழி, பொதுக்குழு உறுப்பினர்கள் வெ.ந. உதயகுமார், மு.மா.ச.முருகன், ச.கார்த்திகேயன், ச.குப்புசாமி, தங்கம் சந்திரசேகர், எஸ்.பி.சரஸ்வதி, இரா.மணி கண்டன், ஜோ.நோயல் செல்வம், கழக தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மறை, கழக தீர்மானக்குழு உறுப்பினர் மு.ரா. செல்வராஜ், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.பி.நாகராஜ், கழக கலை, இலக்கிய, பகுத்தறிவு பேரவை துணை செயலாளர் மீனா ஜெயக்குமார், கழக மாணவர் அணி துணை செயலாளர் வி.ஜி. கோகுல், கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் நா.தமிழ்ச்செல்வன், பகுதி கழக செயலாளர்கள் வ.ம.சண்முகசுந்தரம், பரணி பாக்கியராஜ், பாலசுப்பிரமணியம், கே. எம். ரவி, சி.ஜெயச்சந்திரன், சி.ராமச்சந்திரன், எஸ்.எம். சாமி, கஸ்தூரி அருண், சிங்கை மு.சிவா, ப.அன்பழகன், சேக் அப்துல்லா, ஏ.எஸ்.நடராஜ், மா.நாகராஜ், இரா.சேரலாதன், ப. மோகன்ராஜ், ஆர்.எம்.சேதுராமன், மார்க்கெட் மனோகரன், வி.ஐ.பதுருதீன், ஆ.கண்ணன், என்.ஜே.முருகேசன், இலா.தேலசீலன், டெம்போ சிவக்குமார் உள்பட வட்டக் கழக செயலாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :

தீர்மானம் 1 : கரூரில் நடைபெற்ற துயர சம்பவத்திற்கு, இரவோடு இரவாக கரூர் வந்து, தாயுள்ளத்தோடு இன்னுயிர் இழந்த குடும்பத்தார்களுக்கு ஆறுதல் கூறியும் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு அரசு சார்பில் ரூபாய் 10 லட்சம் இழப்பீடு வழங்கியும் விபத்தில் பாதிக்கப்பட்டு, அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த 100க்கும் மேற்பட்டவர்களுக்கு, அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வந்தவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் இந்தக் கூட்டம் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது.

மேலும், விபத்திற்கான உண்மை காரணத்தை கண்டறிய, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி கொண்டு ஒருநபர் விசாரணை ஆணையம் அமைத்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றிகளை தெரிவித்து கொள்கிறது. விபத்தில் சிக்கியவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு சென்று உதவிய காவல்துறையினர், ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், தன்னார்வலர்கள், கரூர் பொதுமக்கள் மற்றும் பேருதவி புரிந்தோர் என அனைத்துத் தரப்பினருக்கும், நெஞ்சார்ந்த நன்றிகளை இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் 2 : கரூரில் நடைபெற்ற துயர சம்பவத்தின் போது, தகவல் கிடைத்த சில மணித்துளிகளில் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்குச் சென்று, ஆபத்தான முறையில் சிகிச்சை பெற்று வந்த 100க்கும் மேற்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை கொடுத்து அவர்களின் உயிர்களை காப்பாற்ற, கண் துஞ்சாது கடமையாற்றிய மேற்கு மண்டல பொறுப் பாளரும், முன்னாள் அமைச்சருமான நெஞ்சம் நிறைந்த வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ அவர்களுக்கு இக்கூட்டம் நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

தீர்மானம் 3 : கோவை மாநகர் மாவட்டத்தின் இளைஞர் அணி துணை அமைப்பாளராகவும், பகுதி கழகச் செயலாளராகவும் தான் வகித்த அனைத்து பொறுப்புகளிலும் திறம்பட பணியாற்றிய படித்த, பண்பான, துடிப்புமிக்க இளைஞரான துரை.செந்தமிழ் செல்வன் அவர்களை, கோவை மாநகர் மாவட்ட கழகத்தின் பொறுப்பாளராக நியமனம் செய்த, கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளம்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், மேற்கு மண்டல பொறுப்பாளர், கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி அவர்களுக்கும் இக்கூட்டத்தின் மூலமாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் 4 : கரூரில் நடைபெற்ற துயர சம்பவத்தை வைத்து அரசியல் செய்து தி.மு.க மீதும், தமிழக அரசின் மீதும் அவதூறு பரப்பிய பிஜேபி, அதிமுக, த.வெ.க போன்ற கட்சிகளையும் மற்றும் பொய்யான செய்திகளையும், திட்டமிட்டு வதந்திகளையும் உருவாக்கி பரப்பிய சில யூடியூப் பக்கங்களையும் இந்த கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

மேலும் சமூக வலைதளங்களில் தமிழக அரசின் மீதும், நமது கழகத்தின் மீதும் திட்டமிட்டு பரப்பப்பட்ட பொய்யான அவதூறுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் நமது மேற்கு மண்டல பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி அவர்கள் பத்திரிக்கையாளர் சந்திப்பு நடத்தி உண்மை தகவல்களை தகுந்த ஆதாரங்களுடன் எடுத்து கூறி அவதூறுகளை முறியடித்தமைக்கு இந்த கூட்டம் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் 5 : “தமிழ்நாடு போராடும், தமிழ் நாடு வெல்லும்” என்று கழக தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்ட வாசகத்தை கிண்டல் செய்து பேசியுள்ளார் ஆளுநர் ஆர்.என். ரவி அவர்கள்.

இந்தி மொழியை ஏற்றுக் கொண்டால் தான் நிதி கொடுப்போம் என்கின்ற ஆணவத்திற்கு எதிராகவும், மதவெறி பிடித்துக் கொண்டு நாட்டின் வளர்ச்சியை தடுக்கும் கும்பல்களுக்கு எதிராகவும், ஜனநாயகத்திற்கு எதிராக செயல்படும் கூட்டத்திற்கு எதிராகவும், தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய தொழிற்சாலைகளை தடுக்கும் ஆதிக்க வெறியர்களுக்கு எதிராகவும் “தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்” என்று உரக்கக் கூறி ஆளுனர் ஆர்.என்.ரவி அவர்களை இந்த கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

தீர்மானம் 6 : கடந்த செப்டம்பர் 16 ஆம் தேதி உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் அவர்கள் மீது சன் பரிவார் வழக்கறிஞர் ராகேஷ் கிஷோர் என்பவர் செருப்பு வீச முயன்று, இந்திய நாட்டின் தலைமை நீதிபதியை அவமதிப்பு செய்த செயலை இந்த கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.